**மஞ்சள் விவசாயிகள் கவனத்துக்கு...**

First Published : 18 Jul 2011 11:16:42 AM IST

ராசிபுரம், ஜூலை 17: நாமகிரிப்பேட்டை வட்டாரத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள மஞ்சள் பயிரில் நுண்சத்துக் குறைபாடு தென்படுகிறது. இதை நிவர்த்தி செய்ய உரங்களை இலை மூலம் தெளிக்க வேண்டும்.

ஒரு ஏக்கருக்கு 6 கிலோ சூப்பர் பாஸ்பேட் உரத்தை 10 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம். தெளிப்பதற்கு முதல் நாள் ஊற வைக்க வேண்டும். அடுத்த நாள் காலை தெளிந்த நீரை எடுத்து, மேலும் 90 லி தண்ணீர் சேர்த்து கரைசலைத் தயார் செய்யவேண்டும். அக்கரைசலில் 150 கிராம் பெர்ரஸ் சல்பேட், 150 கிராம் ஜிங்க் சல்பேட், 150 கிராம் போராக்ஸ், 150 கிராம் யூரியா போன்ற நுண் சத்துகள் மற்றும் உரங்களைக் கரைக்க வேண்டும். பின் அக்கரைசலை ஒரு ஏக்கர் பரப்புக்கு காலை அல்லது மாலை வேளையில் தெளிக்க வேண்டும்.

மஞ்சள் நட்ட 30, 60, 90, 120 மற்றும் 150-வது நாள்களில், தலா 22 கிலோ யூரியா மற்றும் 12 கிலோ பொட்டாஷ் உரங்களை மேலுரமாக இடலாம் என்று நாமகிரிப்பேட்டை வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் மோகன் விஜயகுமார் தெரிவித்துள்ளார்.

**செம்மை நெல் சாகுபடி தொழில்நுட்ப பயிற்சி**

First Published : 18 Jul 2011 12:09:40 PM IST

கோவில்பட்டி, ஜூலை 17: தமிழ்நாடு நீர்வள, நிலவள திட்டத்தின்கீழ் உப்போடை துணை வடி நிலப் பகுதி விவசாயிகளுக்கு செம்மை நெல் சாகுபடி பற்றிய தொழில் பயிற்சி வியாழக்கிழமை நடைபெற்றது.

கோவில்பட்டி வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் சார்பில் மேலநீலிதநல்லூரில் நடைபெற்ற இப்பயிற்சியை பேராசிரியர் ராம்குமார் தொடக்கி வைத்து, செம்மை நெல் சாகுபடியில் நாற்றங்கால் தயாரித்தல் மற்றும் நடவு முறை பற்றி விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார்.


முதுநிலை ஆராய்ச்சியாளர் செல்வக்குமார் உர மற்றும் களை நிர்வாகம் பற்றியும், களை கருவிகளின் பயன்பாடு பற்றியும், பேராசிரியர் ஆனந்தி நெல் சாகுபடியில் ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் நிர்வாகம் பற்றியும் பேசினர்.

இப்பயிற்சியில் மேலநீலிதநல்லூர் ஊராட்சித் தலைவர் வெள்ளைத்துரை உள்பட திரளான விவசாயிகள் கலந்து கொண்டனர். பயிற்சியில், செம்மை நெல் சாகுபடி பற்றிய தொழில்நுட்ப கையேடு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

தினமலர்

**மாட்டுத் தீவனம் விலை உயர்வு: மானிய விலையில் வழங்க கோரிக்கை**

ஜூலை 19,2011,02:36



சேலம்:விண்ணை தொடும் அளவுக்கு மாட்டு தீவனம் விலை உயர்ந்துள்ளது. இதனால், பால் உற்பத்தியாளர்கள் பொருளாதார ரீதியாக மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.தமிழகத்தில் பெட்ரோல், டீசல் விலையுடன் தீவனத்தின் விலையும் தொடர் ஏற்றம் கண்டு வருகிறது. மத்திய, மாநில அரசு விலைவாசியை கட்டுப்படுத்த எவ்வித நடவடிக்கையும் மேற் கொள்ளாமல், தொடர் அலட்சியம் காட்டி வருகின்றன. பொதுமக்களின் அன்றாட உணவு தேவைக்கு பயன்படும் காய்கறி, மளிகை, பால் உள்ளிட்ட பொருட்களின் விலை, தொடர்ந்து ஏற்றம் கண்டு வருகிறது. பால் உற்பத்திக்கு இன்றியமையாத மாட்டு தீவனங்களின் விலை உயர்ந்துள்ள தால், உற்பத்தியாளர்கள் பெரும் வருவாய் இழப்புக்கு உள்ளாகியுள்ளனர். தமிழகத்தில் பால் கூட்டுறவு சங்கங்கள் மூலம் நாளொன்றுக்கு, 22 லட்சம் லிட்டர் பால் உற்பத்தி செய்யப்படுகிறது. மேலும், பல தனியார் நிறுவனங்களும் பாலை கொள்முதல் செய்து வருகின்றன. கடலை புண்ணாக்கு, சோளத்தட்டு, வைக்கோல் உள்ளிட்ட மாட்டு தீவனங்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. மாட்டு தீவனங்களை பல தனியார் நிறுவனங்கள் தயாரித்து, விற்பனை செய்து வருகின்றன. ஒரு கிலோ மாட்டு தீவனம் 12.50க்கும், 70 கிலோ எடை கொண்ட மூட்டை, 875 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.கடந்த டிசம்பர், ஜனவரி மாதங்களில் மாட்டு தீவனம் கிலோவுக்கு, 1.50 ரூபாய் வரை விலை ஏற்றம் கண்டது. மாட்டு தீவனம் கிலோ, 11 ரூபாய்க்கும், மூட்டை 770 ரூபாய்க்கும் விற்று வந்த நிலையில், மூட்டைக்கு, 105 ரூபாய் வரை விலை ஏற்றம் அடைந் துள்ளது. சோளத்தட்டு ஒரு கட்டு, 100 ரூபாய்க்கு விற்று வந்தது. இது, தற்போது 160 ரூபாய்க்கு விற்பனை செய்யப் படுகிறது. வைக்கோல் கட்டு, 80 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது, 120 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. கடலை புண்ணாக்கு கடந்த ஒரு சில நாள்களில்

மூட்டைக்கு, இரண்டு ரூபாய் வரை விலை ஏறியுள்ளது.மாட்டு தீவனங் களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளதால், பால் உற்பத்தியாளர்களுக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. மேலும், மாட்டு தீவனங்களுக்கான பசும்புல் வளர்ப்பில் ஈடுபடும் தொழிலாளிகளின் கூலியும் கடுமையாக உயர்ந்துள்ளது. விண்ணை தொட்ட மாட்டு தீவனத்தின் விலையை, அரசு குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என, பால் உற்பத்தியாளர்கள் காத்திருக்கின்றனர்.தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் சங்க செயலர் ராஜேந்திரன் கூறியதாவது: மாட்டு தீவனம் விலை ஏற்றம் கண்டுள்ளதால், மாநில அரசு கலப்பு தீவனங்களை தனியார் நிறுவனங்களிடம் இருந்து, மானிய விலையில் வாங்கி, பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்க வேணடும். ஆந்திராவில், தனியார் நிறுவனத்திடம், மாட்டு தீவனத்தை, ஒரு கிலோ, 11 ரூபாய்க்கு வாங்கி, பால் உற்பத்தியாளர்களுக்கு அம்மாநில அரசு வழங்கி வருகிறது. ஆவினம் மூலம் கலப்பு தீவனம் தயாரித்து விற்பனை செய்யப்பட்டு வந்தது, நடைமுறை சிக்கலால், மூன்று ஆண்டுக்கு முன் நிறுத்தப்பட்டது.தமிழ்நாடு கால்நடை துறை, மருத்துவ பல்கலை ஆராய்ச்சி மையம், ஒரு லிட்டர் பால் உற்பத்தி செய்ய, மாட்டுக்கு,400 கிராம் மாட்டு தீவனம் கொடுக்க வேண்டும் என தெரிவித்துள்ளது. நாளொன்றுக்கு, 20 லட்சம் லிட்டர் பால் உற்பத்தி செய்யும் நிலையில், எட்டு லட்சம் கிலோ தீவனம் தேவைப்படுகிறது. எனவே, அரசு தனியார் நிறுவனங்களிடம் இருந்து மாட்டு தீவனங்களை வாங்கி, பால் உற்பத்தியாளர்களுக்கு மானிய விலையில் வழங்க வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

**மாவு பூச்சியை கட்டுப்படுத்த விவசாயிகளுக்கு செயல் விளக்கம்**

பதிவு செய்த நாள் : ஜூலை 19,2011,00:44 IST

விருத்தாசலம் : விருத்தாசலம் பகுதியில் மரவள்ளி சாகுபடியில் மாவுப்பூச்சியை உயிரியல் முறையில் கட்டுபடுத்துவது குறித்து மண்டல ஆராய்ச்சி நிலையம் சார்பில் செயல் விளக்கம் நடந்தது. மண்டல ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் வைத்தியநாதன் தலைமை தாங்கி விளக்கினார். முத்தனங்குப்பத்தில் பயிரிடப்பட்டுள்ள முள்ளுவாடி, வெள்ளைரோஸ் மரவள்ளி ரகங்களில் ஓட்டுண்ணி குளவியை விட்டு விவசாயிகளுக்கு செயல் விளக்கம் செய்து காட்டினர். மேலும் ஒட்டுண்ணி குளவியின் செயல்பாடு, மாவுப்பூச்சியை கட்டுப்படுத்தும் விதம், குளவியை வயலில் விட்டபின் கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகள் பற்றி விளக்கமளித்தனர். மண்டல ஆராய்ச்சி நிலையம் சார்பில் விவசாயிகளுக்கு ஒட்டுண்ணி குளவிகள் வழங்கப்பட்டது.

**மானிய விலையில் உரம் விற்பனை: அதிகாரி தகவல்**

பதிவு செய்த நாள் : ஜூலை 19,2011,00:35 IST

லாலாப்பேட்டை: "கிருஷ்ணராயபுரம் வட்டார வே ளாண்மை விரிவாக்க மையத்தில் தக்கைபூண்டு பசுந்தா ள் உரவிதைகள் மானிய விலையில் வினியோகம் செய்யப்படுகிறது' என கிருஷ்ணராயபுரம் வேளாண்மை உதவி இயக்குனர் பாலகிருஷ்ணன் அறிவித்துள்ளார்.அவர் வெளியிட்ட அறிக்கை: கிருஷ்ணராயபுரம் வட்டார பகுதியில் சம்பா நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள் தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் தக்கைப்பூண்டு பசுந்தாள் உரவிதைகள் மானிய விலையில் வினியோகம் செய்யப்படுகிறது. தேவைப்படும் விவசாயிகள் தங்கள் பகுதி உதவி வேளாண் அலுவலர் அல்லது வேளாண் விரிவாக்க மையத்துக்கு நேரில் சென்று மானிய விலையில் பசுந்தாள் விதையை பெற்று பயன்பெறலாம்.

**மூலிகை பண்ணை: மாணவர்கள் பார்வை**

பதிவு செய்த நாள் : ஜூலை 19,2011,00:52 IST

நெல்லிக்குப்பம் : திருக்கண்டேஸ்வரம் மூலிகை பண்ணையை பள்ளி மாணவர்கள் களப்பயணமாக சென்று பார்வையிட்டனர். நெல்லிக்குப்பம் திருக்கண்டேஸ்வரத்தில் கடந்த 1974ம் ஆண்டு முதல் சமரச சுத்த சன்மார்க்க யோகசாலையை சிவராமன் நடத்தி வருகிறார். இங்கு குருகுல கல்வி, உணவுசாலை, மருத்துவ சாலை, தவக்குடில், யோகசாலை, மூலிகை தோட்டம் உள்ளது. மேலும் யோகா, மூச்சுப்பயிற்சி, தியானம் வகுப்புகள் நடக்கிறது. திருக்கண்டேஸ்வரம் நகராட்சி உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் 200 பேர் நேற்று களப்பயணம் மேற்கொண்டு யோக சாலையை பார்வையிட்டனர். கூடுதல் உதவி தொடக்கக் கல்வி அலுவலர் குணசேகரன், தலைமையாசிரியர் செல்வி, ஆசிரியை பத்மா இளவரசி பங்கேற்றனர். மாணவர்களை நேரடியாக மூலிகை தோட்டத்துக்கு அழைத்துச் சென்று மூலிகைகளின் பயன்கள் மற்றும் மூச்சுப்பயிற்சி, தியானம், யோகா, செயல் விளக்கம் மூலம் அதன் பயன்களை சாது சிவராமன் விளக்கினார்.

**வீராணத்தில் இருந்து பாசனத்திற்கு 27ம் தேதி தண்ணீர் திறக்க முடிவு**

பதிவு செய்த நாள் : ஜூலை 19,2011,00:52 IST

சிதம்பரம் : வீராணத்தில் இருந்து பாசனத்திற்கு வரும் 27ம் தேதியும், சேத்தியாத்தோப்பு அணைக்கட்டில் இருந்து 30ம் தேதியும் தண்ணீர் திறக்கப்படுகிறது. காட்டுமன்னார்கோவில் அருகே உள்ள வீராணம் ஏரியின் மூலம் காவிரி டெல்டா பகுதியான சிதம்பரம், காட்டுமன்னார்கோவில் பகுதியில் 70 ஆயிரம் ஏக்கர் பாசனம் பெற்று வருகிறது. சென்னை மக்களின் தாகத்தை தீர்க்கவும் இங்கிருந்து சென்னைக்கு தண்ணீர் கொண்டு செல்லப்படுகிறது. கடந்த மாதம் 6ம் தேதி காவிரி டெல்டா பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்பட்டு கீழணைக்கு வந்து சேர்ந்தது. அதனைத் தொடர்ந்து 29ம் தேதி கீழணையில் இருந்து வீராணத்திற்கு தண்ணீர் திறக்கப்பட்டது. தற்போது வீராணத்திற்கு 100 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கும் நிலையில் ஏரியில் 507 மில்லியன் கன அடி தண்ணீர் உள்ளதால் சிதம்பரம், காட்டுமன்னார்கோவில் பகுதி பாசனத்திற்கு வீராணத்தில் இருந்து தண்ணீர் திறக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை வைத்தனர். அதனைத் தொடர்ந்து பாசனத்திற்கு தண்ணீர் திறப்பது தொடர்பாக நேற்று சிதம்பரத்தில் பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் செல்வராஜ் தலைமையில் ஆலோசனை கூட்டம் நடந்தது.
உதவி செயற் பொறியாளர் ராமமூர்த்தி, விவசாய சங்க ரவீந்திரன், இளங்கீரன், கண்ணன், ரங்கநாயகி உள்ளிட்டோர் பங்கேற்றனர். கூட்டத்தில், வீராணத்தில் இருந்து பாசனத்திற்கு 27ம் தேதி தண்ணீர் திறப்பது என்றும், சேத்தியாத்தோப்பு அணைக்கட்டில் இருந்து 30ம் தேதி தண்ணீர் திறப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.

**மண்புழு உர மானியம்**

பதிவு செய்த நாள் : ஜூலை 18,2011,23:05 IST

வடமதுரை : வடமதுரை வட்டாரத்தில் இவ்வாண்டு மானாவாரி பகுதி மேம்பாட்டு திட்டத்தின் (ஆர்.ஏ.டி.பி) மூலம், மண்புழு உர உற்பத்தியை அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது. மண்புழு உரம் தயாரிக்க முன்வரும் விவசாயிகளுக்கு அதிகபட்சமாக 30,000 ரூபாய் வரை மானியம் கிடைக்கும். சிட்டா, அடங்கல், வரைபடம் ஆகிய ஆவணங்களுடன் உதவி வேளாண் அலுவலர்களை அணுகி பதிவு செய்யலாம் என, உதவி இயக்குனர் பாஸ்கரன் தெரிவித்துள்ளார்.

**இயற்கை சீற்றத்திற்கு பயிர் காப்பீடு திட்டம்**

பதிவு செய்த நாள் : ஜூலை 18,2011,22:48 IST

வடமதுரை : இயற்கை சீற்றத்தால் ஏற்படும் பயிர் பாதிப்பிற்கு, காப்பீடு திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.
வேளாண் உதவி இயக்குனர் பாஸ்கரன் கூறியது:வடமதுரை வட்டாரத்தில் இவ்வாண்டு, மழை மற்றும் பருவ நிலை பயிர் காப்பீடு திட்டம் செயல்படுத்த, அரசு உத்தரவிட்டுள்ளது. அதிக, குறைந்த மழை; தட்ப வெப்பத்தால் பயிர் பாதிப்பு ஏற்பட்டால் இழப்பீடு வழங்கப்படும். ஏதாவது ஒன்று அல்லது அதற்கு மேல் உள்ள காரணிகளால் பாதிப்பு இருந்தால், அதற்கேற்ப இழப்பீடு கிடைக்கும். விவசாயிகள் உதவி வேளாண் அலுவலரிடம் பதிவு செய்து பலன் பெறலாம், என்றார்.

**தோட்டக்கலை பயிர்களுக்கு மானியங்கள்**

பதிவு செய்த நாள் : ஜூலை 18,2011,23:15 IST

போடி : தேசிய தோட்டக்கலை இயக்கம் சார்பில், ஒரு ஹெக்டர் மா சாகுபடிக்கு முதலாம் ஆண்டு 9 ஆயிரத்தி 900 ரூபாய், இரண்டாம் ஆண்டு 3300 ரூபாய், நெல்லிக்கு 10 ஆயிரத்தி 503 ரூபாய், 3,500 ரூபாய், கொட்டை முந்திரிக்கு 12 ஆயிரம், 4,000 ரூபாய், தென்னையில் ஊடுபயிராக கோகோ பயிரிடுவதற்கு, 12 ஆயிரம் ரூபாய், 4,000 ரூபாய்,என மானியம் வழங்கப்படுகிறது. மலர் சாகுபடியில் கிழங்கு வகை நிலச்சம்பங்கிக்கு 45 ஆயிரம் ரூபாயும், குண்டு மல்லி, கோழிக்கொண்டை, கனகாம்பரம், சாமந்தி போன்றவற்றிற்கு 12 ஆயிரம் ரூபாயும், மிளகாய்க்கு 12 ஆயிரத்தி 500 ரூபாயும், கொட்டை முந்திரி பழைய தோட்டம் புதுப்பித்தலுக்கு ஹெக்டருக்கு 15 ஆயிரம் ரூபாய் பெறலாம்.

நெருக்கி நடவு முறை மா சாகுபடிக்கு, ஹெக்டருக்கு 22 ஆயிரத்தி 200 ரூபாய், இரண்டாம் ஆண்டிற்கு 7,400 ரூபாய், திசுவாழைக்கு 31 ஆயிரத்தி 200 ரூபாய், கிழங்கு மூலம் வாழை சாகுபடிக்கு 16 ஆயிரத்தி 867 ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது. தேசிய விவசாய வளர்ச்சித் திட்டத்தில், துல்லிய பண்ணையம் முறையில் வாழை மற்றும் காய்கறிகள் சாகுபடிக்கு, சொட்டுநீர் பாசனம், உரம், விதை ஆகியவற்றிற்கு ஹெக்டருக்கு 65 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது. மானியம் பெற, விவசாய உதவி அலுவலர்கள், தோட்டக்கலை அலுவலர்களிடம் விண்ணப்பிக்கலாம், என தோட்டக்கலை உதவி இயக்குநர் கெர்சோன் தங்கராஜ் தெரிவித்துள்ளார்.

**தீவிர காய்கறி உற்பத்தி திட்டம்**

பதிவு செய்த நாள் : ஜூலை 18,2011,22:19 IST

ராஜபாளையம் : ராஜபாளையம் இளைஞர் சங்கம் மற்றும் பசுமை இயக்கம் சார்பில் ஆடியை முன்னிட்டு நடந்த தீவிர காய்கறி உற்பத்தி திட்டத்தை தொழிலதிபர் தனுஷ்கோடி ராஜா துவக்கி வைத்தார். சங்க தலைவர் வேலாயுதராஜா முன்னிலை வகித்தார். இயக்க நிர்வாகி ராஜாலிங்கம் வரவேற்றார். காய்கறி வளர்ப்பின் அவசியம் குறித்து ஆக்சிஸ் வங்கி மேலாளர் தங்கதிருப்பதி, காமராஜர் நினைவு மேல்நிலை பள்ளி தலைமை ஆசிரியர் ராமசாமி, கம்பன் கழக செயலாளர் முத்துகிருஷ்ண ராஜா பேசினர். இந்த ஆண்டு பயிர்க்குழி விதை பாக்கெட்டுகள் 5500 வழங்க முடிவு செய்யப்பட்டு உள்ளது. இதன்படி இரண்டு லட்சம் காய்கறிகள் உற்பத்தியாகும் என எதிர்பார்க்கின்றனர்.

தினகரன்

**திராட்சை கிலோ ரூ.58 விவசாயிகள் மகிழ்ச்சி**

பதிவு செய்த நாள் : 7/19/2011 0:39:2



தொண்டாமுத்தூர் : கோவை அடுத்த தொண்டாமுத்து ர் பகுதியில் 50க்கும் மேற்பட்ட கிராமங்களில் விதையுடன் கூடிய கறுப்பு பன்னீர் திராட்சை ஆண்டு முழுவதும் சாகுபடி செய்யப்படுகிறது. கேரளாவில் அதிகளவில் விற்பனையாகிறது. திராட்சை கிலோ ரூ.18 முதல் ரூ.45 வரை விற்று வந்தது. கடந்த மாதம் பெய்த மழையால் திராட்சை கொடிக்கு கவாத்து வெட்டப்படவில்லை. இதனால் திராட்சை உற்பத்தி பாதிக்கப்பட்டு, விலை கிடுகிடுவென உயர்ந்தது. மாதம்பட்டியில் உள்ள திராட்சை உற்பத்தியாளர் சங்கத்தில் கிலோ ரூ.58க்கும், 6 கிலோ கொண்ட அட்டை பெட்டி ரூ.330க்கும் நேற்று முன்தினம் விற்கப்பட்டது. 3 ஆண்டுகளுக்கு பிறகு திராட்சைக்கு அதிக விலை கிடைத்து உள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

## உரங்கள், பூச்சிமருந்து விலை பல மடங்கு உயர்வு

பதிவு செய்த நாள் : 7/19/2011 0:38:33



திருச்சி : சாகுபடி பணிகள் தொடங்கிய நிலையில் விவசாயத்துக்கு தேவையான உரங்கள், பூச்சிக்கொல்லிகள், நுண்ணூட்டங்கள் ஆகியவை பல மடங்கு விலை உயர்ந்துள்ளது. காவிரி நீர்ப்பாசன மாவட்டங்களுக்கு கடந்த மாதம் 6ம் தேதி மேட்டூர் அணையில் தண்ணீர் திறக்கப்பட்டது. கடந்த ஆண்டுகளைவிட ஒருவாரம் முன்னதாக தண்ணீர் திறக்கப்படுகிறது என்றும் அறிவிக்கப்பட்டது. இந்த ஆண்டு, டெல்டா மாவட்டங்களில் மட்டும் 3 லட்சம் ஏக்கர் குறுவை சாகுபடி பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சாகுபடி பணிகளுக்கு ஆட்கள் கிடைக்காமல், நடவுப் பணிகளில் தேக்கம் ஏற்பட்டுள்ளது. இதனால் கூடுதல் சம்பளம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், விவசாயத்துக்கு தேவையான அடி உரம், மேலுரம், நுண்ணூட்டங்கள், பூச்சிக்கொல்லிகள் ஆகியவற்றின் விலைகள் பல மடங்கு உயர்ந்துள்ளன. இது விவசாயிகளை மேலும் பாதிப்புக்குள்ளாக்கி உள்ளது. இதுகுறித்து விவசாயி சரவணன் கூறுகையில், ஜுன் மாதத்துக்கு பிறகுதான், டெல்டா மாவட்டங்களில் நடவுப் பணிகள் தீவிரம் அடையும்.

இந்நிலையில், கடந்த சீசனை விட தற்போது உரங்கள், பூச்சிக்கொல்லிகள், நுண்ணூட்டங்கள் ஆகியவற்றின் விலை பல மடங்கு உயர்ந்துள்ளது. குறிப்பாக கடந்த சீசனில் ஒரு மூட்டை டி.ஏ.பி ரூ.486க்கு விற்றது, தற்போது ரூ.624க்கு விற்கிறது. பொட்டாஷ் ரூ.231 லிருந்து ரூ.314க்கும், காம்ப்ளக்ஸ் ரூ.410லிருந்து ரூ.520ஆகவும் உயர்ந்துள்ளது. இதேபோல் பூச்சிக்கொல்லி மருந்துகள், நுண்ணூட்டங்கள் ஆகியவை 30 சதவீதத்துக்கு மேல் உயர்ந்துள்ளது. ஆனால், நெல் கொள்முதல் விலை மட்டும் உயரவே இல்லை. உடனடியாக இடுபொருட்களின் விலையை குறைக்க வேண்டும் என்றார்.

காவிரி டெல்டா விவசாயிகள் சங்கங்களின் கூட்டமைப்பின் பொதுச்செயலாளர் ஆறுபாதி கல்யாணம் கூறியதாவது: கடந்த 1981ம் ஆண்டு ஆண்களுக்கு ரூ.7, பெண்களுக்கு ரூ.5 என விவசாய தொழிலாளர் ஜோடிக்கு ரூ.12 சம்பளம் நிர்ணயிக்கப்பட்டது. அப்போது ஒரு குவிண்டால்(100 கிலோ) நெல் ரூ.120க்கு கொள்முதல் செய்யப்பட்டது. ஆனால், தற்போது ஒரு ஜோடி தொழிலாளர்களுக்கு ரூ.350&400 சம்பளம் கொடுக்க வேண்டி உள்ளது.

மேலும், ரசாயன உரங்கள் விலை உயர்வு, அறுவடை இயந்திரங்கள் பயன்பாடு என விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். தற்போது குவிண்டால் நெல்லுக்கு ரூ.1000 மற்றும் ரூ.1,100 மட்டுமே வழங்கப்படுகிறது. எனவே, தேசிய வேளாண் ஆணைய பரிந்துரைப்படி, விவசாய உற்பத்தி பொருட்களை, அதன் உற்பத்தி செலவைவிட 50 சதவீதம் கூடுதல் விலையில் கொள்முதல் செய்ய வேண்டும். முதல்கட்டமாக நெல்லுக்கு குவிண்டாலுக்கு ரூ.3,000 விலை நிர்ணயம் செய்ய வேண்டும். அதுவரை குவிண்டாலுக்கு ரூ.300 ஊக்கத்தொகை வழங்க வேண்டும். இவ்வாறு ஆறுபாதி கல்யாணம் தெரிவித்தார்.